**செ.வெ.எண்: 42** **நாள்: 15.08.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் கிராம சபைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சுதந்திர தினத்தையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 497 கிராம ஊராட்சிகளிலும், கிராம சபைக்கூட்டம் இன்று (15-08-2016) நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மதியநல்லூர் ஊராட்சி, மதியநல்லூர் கிராமத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் ஊராட்சிமன்றத்தலைவர் திரு.வீ.ராமசாமி அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கிராம சபைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஜனவரி 2016 முதல் ஜூலை 2016 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், கிராம ஊராட்சி வளர்ச்சி திட்ட அறிக்கை, சுகாதாரம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) 2016-17, ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள், மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், கொசுக்கள் மூலம் பரவும் டெங்குக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இதர பொருட்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

புதுவாழ்வு திட்டம் சார்பில் 9 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் நிதிஉதவி தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது. இந்த ஊராட்சியில் அதிக மரக்கன்றுகள் நட்டு வளர்க்க தேவையான மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதுடன் புதிய சுகாதாரவளாகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இப்பகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மதியநல்லூர் கிராமத்தில் மரக்கன்றுகளை நட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மதியநல்லூர் அரசு உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பில் தொடர்ந்து 4 ஆண்டுகள் 100 சதவிகிதம் தேர்ச்சி விழுக்காட்டை பெற்றுத்தந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பாராட்டி கேடயங்களை வழங்கியதுடன் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசினையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.செ.சாந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன், மாவட்ட கல்வி அலுவலர் திரு.உ.பரமசிவம், மாவட்ட திட்ட மேலாளர் (புதுவாழ்வுதிட்டம்) திருமதி.வசுமதி, ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.இளவரசி வசந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாஸ்கர், வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**